## கோலாலம்பூர் டத்தோ பண்டாராக

# மைமுனா நியமனம்



கோலாலம்பூர், ஆக. 15- அனைத்துலக உள்நாட்டு சுற்றுச்சூழல் மன்றத்தின் தலைவரான டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிஃப் கோலாலம்பூரின் புதிய டத்தோ பண்டாராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கோலாலம்பூர் டத்தோ பண்டாராக நியமனம் செய்யப்பட்ட முதல் பெண்மணியாக விளங்கும் அவரின் பதவி இன்று முதல் அமலுக்கு வருவதாக கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.

1960ஆம் ஆண்டு கூட்டரசு தலைநகர் சட்டத்தின் 4 (2) பிரிவின் கீழ் மாமன்னர் சுல்தான் இப்ராஹிம் சுல்தான் இஸ்கண்டார் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நியமனத்தின் மூலம் நல்ல அனுபவம் வாய்ந்த மைமுனா கோலாலம்பூர் மாநகர் மன்றத்தைச் சிறப்பான முறையில் நிர்வகிப்பார் எனத் தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

பல பல்கலைக்கழகங்களில் பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ள அவர், கூட்டரசுப் பிரதேச மேம்பாட்டிற்கு முக்கியப் பங்காற்றுவார் எனவும் கூறினார்.

நைரோபியில் செயல்பட்டு வரும் ஐநாவின் குடியேற்றத் திட்ட மாநாட்டில் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றி வந்த அனுபவம் அவருக்கு உள்ளது. கடந்த 6 ஆண்டுகளாக அப்பதவியை வகித்து வரும் ஒரே பெண்மணியாகவும் அவர் விளங்கி வந்துள்ளதாக டாக்டர் ஸலிஹா கூறினார்.